அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 26/2016

எனது இல: EST-7/ALLOW/06/0007/04
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2016.11.16

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும்

**<u>இருமொழி / மும்மொழி ஆற்றல்கொண்ட வளவாளர் தரவுத் தளமொன்றைத் தாபித்தல்</u>**

இருமொழி / மும்மொழி ஆற்றல்கொண்ட வளவாளர் தரவுத் தளமொன்றை மாவட்ட மட்டத்தில் தாபிப்பதற்கு 2016.03.30 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டு, அரசகரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட எழுத்துமூலப் பரீட்சையிலும், கேட்டல் திறன் மற்றும் பேச்சுத்திறன் ஆகியவற்றினை உள்ளடக்கிய பரீட்சையிலும் சித்தியெய்திய வளவாளர்களின் தரவுகள் (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி) www.bashawa.lk எனும் இணையத்தளத்தினூடாக ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

03. இவ் வளவாளர்களை தரவுத் தளத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பான பரீட்சை அரசகரும மொழிகள் ஆணையாளரினால் வருடாந்தம் நடாத்தப்படும். அரசாங்க சேவையைச் சேர்ந்த அலுவலர்கள், ஓய்வு பெற்ற அலுவலர்கள், தனியார் துறை அலுவலர்கள், தற்போது எதுவித சேவையிலும் ஈடுபடாவர்கள் ஆகிய அனைவருக்கும் அப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

04. இருமொழி/ மும்மொழிகளில் கடமைகளை மேற்கொள்வது தொடர்பாக ஏற்கேனவே அரசாங்க சேவையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ள அலுவலர்களிடமிருந்து சிறந்த முறையில் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு இயலாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேலே 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வளவாளர்களின் மூலம் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. மேற்படி தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வளவாளர்களிடம் இருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது பின்வருமாறு கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

I. 2016.03.30 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்திற்கமைய அத் தரவு தளத்தில் உள்வாங்கப்பட்டுள்ள அலுவலர்களிடம் இருந்து சேவையை, அரசாங்க நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளும் போது, மொழிபெயர்ப்பது தொடர்பாக பயன்படுத்தும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல்லுக்கு ரூபா 2.50 வீதம் செலுத்துவதற்கும்,

II. அன்றாடம் சேவையைப் பெற்றுக் கொள்வதாயின் 08 மணித்தியால காலத்திற்கு ரூபா 1000/= வீதம் ( ஆயிரம் ரூபா) செலுத்துவதற்கும்,

III. ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பின், மாதாந்தம் ரூபா 30,000/= (முப்பதாயிரம் ரூபா)

IV. மொழிபெயர்ப்பு தொடர்பான தட்டெழுத்து/ கணிணி அச்சிடல் தொடர்பாக, 2016.08.22 ஆந் திகதிய அரசாங்க சேவை சுற்றறிக்கை 12/2003(III) இன் 04 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய செலுத்துவதற்கும்,

06. இவ் வளவாளர்களின் சேவையை தமது நிறுவனம் பெற்றுக் கொள்வதற்கு கருதும் பட்சத்தில், அவர்களுக்கான கொடுப்பனவுகள், அரசகரும மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஒரு நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவினத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையறைகளினுள் குறித்த செலவுகளை ஏற்பதற்கு தாபனத் தலைவரினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

07. இத் தரவுத்தளத்தில் வளவாளர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனத் தலைவர்கள் அவர்களது சேவையின் தரம் தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளருக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியினதும், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு